11.01.2019

இ.ஏ. 9/17 இ.பி.150/98 அ.வ.எண். 786/95

பிடபிள்யு. 1 சாம்பசிவம்

குறுக்கு விசாரணை

மனுவின் என்ன காரணம் சொல்லி தாக்கல் செய்துள்ள என்ற விபரம் எனக்கு தெரியும். மனுவில் ஏற்கனவே சுவர் இருந்த இடத்தில் கட்டிம் கட்டியுள்ளதாக சொல்லியுள்ளேன். அசல் வழக்கில் நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்த்த விபரம் எனக்கு தெரியும். எந்த தேதியில் வந்து பார்த்தார் என்று எனக்கு நியாபகம் இல்லை. 17 வருடம் முன்பு எந்த தேதி மாதம் வருடம் இருந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். பேரூராட்சி ஒப்புதலோடுதான் எனது இடத்தை கட்டியிள்ளேன் என்று காட்டுவதற்கு அந்த பிளானின் நகல் இந்த மனுவில் தாக்கல் செய்யவில்லை என்றால் அசல் வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள பிளான் மற்றும் நீதுமன்ற அளறிக்கை ஆகியவற்றை பார்த்து தான் அசல் வழக்கில் தீர்ப்பு ஏற்பட்டது என்றால் சரிதான். எனது மனுவீ ல் எனது அத்துக்குள் நான் கட்டியுள்ளதால் நீதிமன்றத்தில் இருந்து பார்த்து தாவா இடத்தை பார்த்து எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரியல்ல எனக்கு ஆட்சேபனை உள்ளது. நான் ஏற்கனவே சுவர் இருந்த இடத்தில் தான் கட்டியுள்ளேன். எனது வாக்குமூலத்தில் தாவா சந்தை விட்டுவிட்டுதான் நான் கட்டியிருக்கிறேன் என சொல்லியுள்ளதால் நீதிமன்றத்தில் இருந்து வந்து பார்த்து அதுபோல் இல்லை என்றால் இடித்துக்கொள்வதில் எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான். அசல் வழக்கை எதிர்த்து நான் செய்த மேல்முறையீடு எனக்கு விரோதமாக சென்றுவிட்டது என்றால் சரிதான். நிறைவேற்றுமனு 1998ம் வருடத்தில் தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். நிறைவேற்றுமனு 98 ல் தாக்கல் செய்துள்ளது 20 வருடம் கழித்து தற்போது இந்த இடைமனுவை தாக்கல் செய்துள்ளதற்கு என்ன காரணம் என்றால் தற்போது தான் நான் வழக்கினை படித்து பார்த்து இந்த மனுவினை தாக்கல்செ சய்துள்ளேன். அப்பீல் தாக்கல்செய்தபோதும் படித்து பார்த்தேன். அப்பில் 1996 ல் செய்தேன் என்றால் சரிதான். மனுதாரரை கஷ்டபடுத்தவேண்டி இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளேன் என்றம் நான் சொல்வது போது இடம் விட்டு நான் சுவர் எழுப்பவில்லை என்றும் மனுவிற்காக பொய்யாக சொல்கின்றேன் என்றால் சரியல்ல.